தினமலர்

16-2-2026 திங்கள்

# தாய்ப்பால் ஊக்குவிப்பு ஆலோசனை திட்டம்: செவிலியர் குழுவிற்கு பாராட்டு

**புதுச்சேரி, பிப். 16–** தாய்ப்பால் ஊக்குவிப்பு ஆலோசனை திட்டத்தை செயல்படுத்தி வரும் செவிலியர் குழுவினருக்கு, ஜிப்மர் இயக்குநர் வீர் சிங் நேகி பாராட்டு தெரிவித்தார்.

புதுச்சேரி ஜிப்மரில், தேசிய தரம் வாய்ந்த பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகிறது. இங்கு, தாய்ப்பால் ஆலோசனை சேவைகளை வலுப்படுத்தும் பணியை ஜிப்மர் செவிலியர் துறை முன்னின்று மேற்கொண்டது.

அதனடிப்படையில், பிரிஸ்ட்பீடிங் புரோமோஷன் நெட்வொர் ஆப் இந்தியா பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, செவிலியர் சங்கம் புதுச்சேரி கிளையின் ஆதரவுடன், பயிற்சி திட்டம் வடிவமைப்பட்டது.

செவிலியர் மேலாளர் ஜேன்மேரி ஆண்ட்ரூ தலைமையிலான, செவிலியர் குழுவினர் மகளிர் மற்றும் குழந்தைகள் சிகிச்சை பிரிவுகளிலும் நியமிக்கப்பட்டு, 24 மணி நேர தாய்ப்பால் ஆலோசனை சேவையை வழங்கி வருகின்றனர்.

இக்குழு, தாய்மார் களை தங்களது குழந்தைகளுக்கு முறையாக தாய்ப்பால் புகட்டுவதும், தாய்ப்பால் தேவைப்படும் பிற குழந்தைகளுக்கு தானமாக வழங்குவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.



■ஜிப்மரில் தாய்ப்பால் ஊக்குவிப்பு ஆலோசனை திட்டத்தின் கீழ் தாயிடம், செவிலியர் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இச்சேவையின் மூலமாக, ஜிப்மரின் "அமுதம் தாய்ப்பால் மையம்" தினசரி பெறும் தாய்ப்பாலின் அளவு இரட்டிப்பாக உயர்ந்துள்ளது. இச்சேவை, நோயுற்ற மற்றும் பேறு காலத்துக்கு முன் பிறந்த குழந்தைகளுக்கு பெரும் பயனை தரும்.

செவிலியர் குழுவின் தலைமையில்திட்டத்தை வெற்றிகரமாக வழி நடத்திய செவிலியர் குழுவினருக்கு, ஜிப்மர் இயக்குநர் வீர் சிங் நேகி பாராட்டு தெரிவித்தார்.

இந்து தமிழ் திசை

# ஜிப்மரில் 26 மருத்துவ அதிகாரிகள் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

■ புதுச்சேரி

புதுச்சேரி ஜிப்மரில் 26 இளநிலை உள்ளிருப்பு மருத்துவர்கள் பணிகளுக்கு விண்ணப்பிக்கலாம். 12 மாதங்களுக்கு பணி என்ற அடிப்படையில், எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் இந்தப் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இடபிள்யூஎஸ் பிரிவின் கீழ் காலி பணியிடங்கள் நிரம்பாவிட்டால் பொது, இதர பிரிவை சேர்ந்தவர்களை கொண்டு தகுதி அடிப்படையில் பணியிடங்கள் நிரப்பப்படும்.

இப்பணிக்கு விண்ணப்பிப்போர் எம்பிபிஎஸ் படிப்பில் தேர்ச்சி (ஒரு வருட இன்டர்ன்ஷிப்) பெற்றிருக்க வேண்டும். எழுத்துத் தேர்வு வரும் 28-ம் தேதி காலை 9 மணி முதல் 10 மணி வரை நடைபெறும்.

எழுத்துத் தேர்வில் ஒரு கேள்விக்கு 2 மதிப்பெண்கள் வீதம் 40 கேள்விகள் இடம் பெற்றிருக்கும். இதில் தகுதி பெற பொதுப்பிரிவினர் 80 மதிப்பெண்களுக்கு 40 மதிப்பெண்களும், பொதுப்பிரிவு மாற்றுத்திறனாளிகள் 36 மதிப்பெண்களும், ஓபிசி, எஸ்சி, எஸ்டி பிரிவினர் 32 மதிப்பெண்களும் எடுக்க வேண்டும்.

எழுத்துத் தேர்வில் தகுதி பெற்றவர்களுக்கு வரும் 28-ம் தேதி மதியம் 2 மணிக்கு ஜிப்மர் நிர்வாக கட்டிடத்தின் தரை தளத்தில் நேர்காணல் நடத்தப்படும். இந்த நேர்காணலுக்கு 20 மதிப்பெண்கள் வழங்கப்படும். இப்பணிக்கு விண்ணப்பிக்க ஆர்வம் உள்ளவர்கள் வரும் 27-ம் தேதி மதியம் 3 மணிக்குள் ஜிப்மர் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். இத்தகவலை ஜிப்மர் இயக்குநர் வீர் சிங் நேகி தெரிவித்துள்ளார்.

தினகரன்
பிப்ரவரி 16, 2026 திங்கட்கிழமை

# ஜிப்மரில் 26 மருத்துவ அதிகாரி பணிக்கு விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி, பிப். 16: புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் 26 இளநிலை உள்ளிருப்பு மருத்துவர் பணிக்கு தகுதியான இந்திய குடிமகன்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது. 12 மாத காலத்திற்கு பணி என்ற அடிப்படையில் எழுத்து தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் இந்த பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளது. மொத்த காலி பணியிடங்கள் எண்ணிக்கை மாற்றத்துக்கு உட்பட்டது. இடபிள்யூஎஸ் பிரிவின் கீழ் காலி பணியிடங்கள் நிரப்பாவிட்டால் பொது, இதர பிரிவை சேர்ந்தவர்களை கொண்டு தகுதி அடிப்படையில் பணியிடங்கள் நிரப்பப்படும்.

இப்பணிக்கு விண்ணப்பிப்போர் எம்பிபிஎஸ் படிப்பில் தேர்ச்சி (ஒரு வருட இன்டர்ன்ஷிப்) பெற்றிருக்க வேண்டும். எழுத்து தேர்வு வருகிற 28ம் தேதி காலை 9 மணி முதல் 10மணி வரை நடைபெறும். எழுத்து தேர்வில் ஒரு கேள்விக்கு 2 மதிப்பெண்கள் வீதம் 40 கேள்விகள் இடம் பெற்றிருக்கும். இதில் தகுதி பெற பொதுப்பிரிவினர் 80 மதிப்பெண்களுக்கு 40 மதிப்பெண்களும், பொதுப்பிரிவு மாற்றுத்திறனாளிகள் 36 மதிப்பெண்களும், ஓபிசி, எஸ்சி, எஸ்டி பிரிவினர் 32 மதிப்பெண்களும் எடுக்க வேண்டும். எழுத்து தேர்வில் தகுதி பெற்றவர்களுக்கு 28ம் தேதி மதியம் 2 மணிக்கு ஜிப்மர் நிர்வாக கட்டிடத்தின் தரை தளத்தில் நேர்காணல் நடத்தப்படும். இந்த நேர்காணலுக்கு 20 மதிப்பெண்கள் வழங்கப்படும். இப்பணிக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் வருகிற 27ம் தேதி மதியம் 3 மணிக்குள் ஜிப்மர் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். இத்தகவலை ஜிப்மர் இயக்குநர் வீர் சிங் நேகி தெரிவித்துள்ளார்.